## மேகதாது அணை திட்டத்தால்

# தமிழ்நாடு விவசாயிகள் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக 1-

கர்நாடகா அரசின் மேகதாது திட்டத்தால் காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஆலோசனை நடத்தப்பட்டதா? என்றும் ஒன்றிய ஜல் சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

கர்நாடக மாநில அரசால் முன்மொழியப்பட்ட மேகதாது அணையானது, அணையானது, தமிழ்நாட்டில் உள்ள காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம், விவசாய உற்பத்தி மற்றும் பாசனம் ஆகியவற்றின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?




எதிர்தது இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு மற்றும் விவசாய அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகள் அல்லது கருத்துருக்கள் வந்துள்ளனவா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குத் தேவையான காவிரி நீர் சரியான நேரத்தில் திறந்துவிடப்படுவதில் இத்திட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன

இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஏதேனும் கலந்தாலோசனை நடத்தப்பட்டதா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நதிநீரில் தமிழ்நாட்டிற்கான நியாயமான பங்கை பாதிக்கும் வகையிலான எந்தவொரு திட்டத்திற்கும், தற்போதுள்ள தீர்ப்பாய மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி ஒப்புதல் அளிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பினார்.




## தமிழ்நாட்டிற்கான அம்ருத் 2.0 திட்டத்தில்

# எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - அந்த நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுகிறதா?

## மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.1-

தமிழ்நாட்டிற்கான அம்ருத் 2.0 திட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அந்த நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுகிறதா என்றும் நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசிடம் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதில், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் எத்தனை உள்ளன? நிதி ஒதுக்கீடு மற்றும் கட்டுமான முன்னேற்றம் எவ்வளவு? கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிட்ட நகரங்கள் அல்லது ஊர்களுக்கு சிறப்பு நிதியுதவி, மானியங்கள், துணை ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதா? ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிப்பதில் தாமதம் அல்லது ஒதுக்கீடுகளில் குறைப்பு என்ற தகவல்கள் உண்மையா என்ற கேள்விகளை எழுப்பி இருந்தார்.



இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் இணை அமைச்சர் டோக்கன் சாஹு, அடல் நகரப் புத்துயிர்ப்பு மற்றும் உருமாற்றத் திட்டம் எனப்படும் அம்ருத் திட்டத்தின் 2.0 கட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள 604 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அல்லது நகரங்களில் ரூ. 14,766.67 கோடி மதிப்பிலான 1,263 திட்டங்களை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அதில், ரூ. 8,049.47 கோடி மதிப்பிலான 206 குடிநீர் வழங்கல் திட்டங்கள், ரூ. 6,378.40 கோடி மதிப்பிலான 29 கழிவுநீர் மேலாண்மைத் திட்டங்கள், ரூ. 225.83 கோடி மதிப்பிலான 467 நீர்நிலைப் புத்துயிர்ப்புத் திட்டங்கள், ரூ. 112.97 கோடி மதிப்பிலான 561 பசுமைவெளி மற்றும் பூங்காத் திட்டங்கள் ஆகியவை அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு அளிக்கும் நிதி உதவி, உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக அல்லாமல், மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்படுவதாகவும் அதன்படி தமிழ்நாட்டிற்கான மொத்த மத்திய ஒதுக்கீடு ரூ. 24,942 கோடியாக இருப்பதாகவும், திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் நிதி உதவியாக ஜூலை முதல் வார நிலவரப்படி ரூ. 2,614.18 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தவிர, சென்னை மாநகராட்சி குடிநீர் வினியோகத்தில் 85% மற்றும் கழிவுநீர் துறையில் 60% நிறைவு நிலையை அடைந்ததற்கான ஒருமுறை ஊக்கத்தொகையாக ரூ. 240 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது என்றும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை முன்னிட்டு, ‘ஜல் ஹி அம்ரித்’ திட்டத்தின் கீழ் ரூ. 107.93 கோடி ஊக்கத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மாநகராட்சிகளுக்கு நகராட்சிப் பத்திரங்களை வெளியிடுவதற்காக ரூ. 91.61 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது மாநிலங்களுக்கு விடுவிக்கப் பட்டுவரும் நிதியை, அந்தந்த மாநிலங்கள் நிகழ்நேர அடிப்படையில் பயன்படுத்திக்கொள்கின்றன என்றும், தமிழ்நாட்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகளில் எந்தக் குறைப்பும் செய்யப்படவில்லை என்றும் திமுக எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

# தமிழ்நாட்டின் அண்ணா, காந்தி காவல் பதக்கங்களை அவமதித்து டெல்லிக்குச் சேவகம் செய்யும் விஜய்!

முதலமைச்சர் தன் கைவசம் வைத்துள்ள காவல்துறையில், தமிழ்நாடு காவலர்களுக்குப் பதக்கம் வழங்கும் விழாவில், அண்ணா பதக்கமே முதன்மையானது. அதுபோலவே காந்தி காவல் பதக்கமும் மதிப்பிற்குரியது. தமிழ்நாட்டின் இந்த இரு பதக்கங்களையும் இருட்டடிப்பு செய்துவிட்டு, விழா மைதானத்தின் பின்னணியில், ‘ஒன்றிய உள்துறை அமைச்சர்’ பதக்கத்திற்கு வானளாவிய பிரம்மாண்ட பேனர்களை வைத்துள்ளார் டம்மி முதல்வர் விஜய்!

காவல்துறையினருக்கு வழங்கப்படும் அண்ணா மற்றும் காந்தி பதக்கங்களே தமிழ்நாட்டின் பெருமை. அதை விடுத்து, ஒன்றிய அரசின் பதக்கத்தை மட்டும் வெட்கமில்லாமல் முன்னிலைப்படுத்தி, பெருமைக்குரிய காக்கிச் சீருடை பதக்க விழாவில் காவி நிறத்தைக் காட்டியிருக்கிறது தவெக அரசு.

தன் மாநிலப் பதக்கத்தின் மாண்பைக் கூடக் காப்பாற்ற வக்கில்லாத இந்த அரசால், தமிழ்நாட்டின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்க முடியும்? என்று தி.மு.கழகம் இணையதளத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.



## தமிழ்நாட்டில் தேவையான அளவிற்கு

# விவசாயிகளுக்கு விதைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் சி. என். அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1-

தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான அளவிற்கு வழங்க சான்றளிக்கப்பட்ட விதைகள் உள்ளனவோ என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என. அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:

(அ) தமிழ்நாட்டில் காரிஃப் (Kharif) மற்றும் ரபி (Rabi) பருவங்களுக்கு சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைப்பதை அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா, மேலும் தற்போதைய இருப்பு விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளதா;



(ஆ) அவசரகால சூழ்நிலைகளுக்காகப் பராமரிக்கப்படும் விதை இருப்புகளின் விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட அளவு எவ்வளவு;

(இ) விவசாயிகளுக்கு சான்றளிக்கப்பட்ட மற்றும் தரமான விதைகள் மட்டுமே வழங்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ஈ) தமிழ்நாட்டின் வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்களில், சாத்தியமான மறு விதைப்புக்காக, குறுகிய கால மற்றும் குறைந்த நீர் தேவைப்படும் விதை ரகங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளனவா;

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை மற்றும்

(ஊ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக, விதைகள் விநியோகிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் தட்ப வெப்ப நிலையைத் தாங்கி வளரக்கூடிய வேளாண்மையை வலுப்படுத்தவும், மோசமான வானிலை நிலைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?இவ்வாறு

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார். அதற்கு வேளாண்துறை இணை அமைச்சர் பதிலளித்தார்.



தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, பல்லாவரம் ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை திடீர் ஆய்வு மேற்கொண்டு உணவு தரமாகவும் சுவையாகவும் உள்ளதா எனவும் கேட்டறிந்து உணவை சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டார். உடன் சுகாதார அலுவலர் மற்றும் வட்டக் கழக செயலாளர் பி.பரமசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

## இருமல் மருந்து உள்ளிட்ட சிரப் வகை மருந்துகளை

# மருத்துவர் பரிந்துரையின்றி விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக 1-

நாட்டில் மருந்துகளின் தரம், இருமல் மருந்து உள்ளிட்ட சிரப் வகை மருந்துகளை மருத்துவர் பரிந்துரையின்றி விற்பனை செய்வதை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், மருந்துகளின் தரக் கட்டுப்பாடு, ஆய்வு, பரிசோதனை, தரமற்ற மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மத்திய மற்றும் மாநில மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மருந்துப் பாதுகாப்பை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான விளக்கத்தை மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் அவர்கள்

கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:-



1940-ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம்

Drugs and Cosmetics Act, 1940 மற்றும் Drugs Rules, 1945-ன் படி, Schedule X, H மற்றும் H1-இல் உள்ள மருந்துகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், 09.06.2026 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம், கிராமப்புறங்களில் இருந்த இருமல் சிரப் விற்பனைக்கு வழங்கப்பட்டிருந்த விதிவிலக்கு நீக்கப்பட்டு, நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், 2022 டிசம்பர் முதல் நாடு முழுவதும் 1,040-க்கும் மேற்பட்ட மருந்து உற்பத்தி நிலையங்களில் ஆபத்து அடிப்படையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 950-க்கும் மேற்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் 1,100-க்கும் மேற்பட்ட இருமல் சிரப் உற்பத்தியாளர்கள் தீவிர தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பரிசோதிக்கப்பட்ட மருந்து மாதிரிகள் மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களும் பதிலில் இடம்பெற்றுள்ளன.

மருந்துப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், Schedule M திருத்தம், தரநிலை ஆய்வு வழிகாட்டுதல்கள், அதிகாரிகளுக்கான பயிற்சிகள், மாநிலங்களுடனான ஒருங்கிணைப்பு, தரமற்ற மருந்துகள் குறித்த “Drug Alert” வெளியீடு மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## அண்ணாநகர் தெற்கு பகுதி

# 106வது வட்டச் செயலாளர் ப.மகேஷ்ராஜா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஆக.1-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்கு பகுதி, 106வது வட்ட கழக செயலாளர் ப.மகேஷ்ராஜா அவர்கள் நேற்று (31.07.2026) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் உடல்நலகுறைவால் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (01.08.2026) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பெரியார் பாதை, ஏரீஸ் மஹால் அருகில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.





சென்னை வட கிழக்கு மாவட்ட கழக சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் வருகின்ற ஆகஸ்ட்7ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் முத்தமிழறிஞரின் நினைவை போற்றும் விதமாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அணியின் மாவட்ட அமைப்பாளர் வெங்கடேசன் தலைமையில் ஆலோசிக்கப்பட்டது.நிகழ்வில் அணியின் மாவட்ட தலைவர் சாரதி பாலாஜி,மாவட்ட துணை அமைப்பாளர்கள் திருவொற்றியூர் ஏகா கார்த்திகேயன், பா.பாலஉமாபதி திருவொற்றியூர் டி.சுதர்சன், செந்தில், இளஞ்செழியன், துணை தலைவர் மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.